**வாக்குமூலம்**
**நீதிமன்றம் இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**
**வழக்கு எண். SC 69/2020**
**வழக்கு சாட்சி PW 6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இளவரசன் | ஜாதி | : | SC |
| தந்தை பெயர் | : | பழனி | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | கீழ்புதுப்பேட்டை | சமயம் | : | இந்து |
| தாலுக்கா | : | வாலாஜா | வயது | : | 29 |

**(எதிரி ஆஜர் )**

**தேதி 23.08.2023**

**முதல் விசாரணை**

நான் கீழ்புதுப்பேட்டை கிராமத்தில் உள்ள காந்தி நகரில் வசித்து வருகிறேன். நான் மேஸ்திரி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கில் இறந்துபோன தனலட்சுமி எதிரியின் மனைவி ஆவார். 18.09.2019 ம் தேதி காலை 5 மணிக்கு எதிரியின் மனைவி தூக்கு போட்டு இறந்துவிட்டதாக தகவல் தெரிந்து நாங்கள் போய் பார்த்தோம். சம்பவ இடத்திற்கு பார்த்தபோது எதிரிக்கும் தனலட்சுமிக்கும் சண்டை போட்டுகொண்டதாக கேள்விப்பட்டேன். தனலட்சுமியின் அண்ணன் கண்ணன் என்பவர் வந்து பார்த்துவிட்டு தனது தங்கையின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக இராணிப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதாக கூறிவிட்டு சென்றுவிட்டார். அதன் பிறகு காலை 11.30 மணிக்கு போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அதில் நானும் என்னுடன் முனிசாமி என்பவரும் சாட்சியாக கையொப்பம் போட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.2** ஆகும். பின்பு அந்த வீட்டில் இருந்து பகல் 12.15 மணிக்கு தனலட்சுமி தூக்கு மாட்ட பயன்படுத்திய சேலையை தரையில் இரண்டாக கிடந்ததை மகஜரில் போலீசார் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் என்னுடன் முனிசாமி என்பவரும் சாட்சியாக கையொப்பம் போட்டோம்.

அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.3** ஆகும். தனலட்சுமி தூக்கு மாட்ட பயன்படுத்திய தரையில் கிடந்த ரோஸ் கலர் பூப்போட்ட 2 துண்டு சேலை **சா.பொ.1.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எனவே குறுக்கு விசாரணை இல்லை.**

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH